**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 175/2023**

**Dated :18.03.2026**

**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW5 Examined as PW4 ( Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பையா | வயது | : | 76 |
| தந்தை பெயர் | : | அடைக்கலம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | **விவசாயம்** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் சுமார் 01.00 மணியளவில், கொல்லைக்கு சென்றிருந்த என் மனைவி சகுந்தலா, என் மகள் கண்ணகி ஆகியோர் திரும்பி வராததால், நான் கொல்லைக்கு அவர்களை தேடிச் சென்றேன். அப்போது என் மகள் கண்ணகி சத்தம் போட்டு அழுது கொண்டு வந்தார். நான் என்ன என்று கேட்ட போது, எதிரிகள் மூவரும் அடித்து, செல்போனை பிடுங்கி கொண்டதாக சொன்னார். என்னைப்பார்த்து விட்டு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அன்றைய தினமே நானும் மற்றொரு பையனும் கொல்லையில் இருந்து வந்த போது, ஆதனக்கோட்டை போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி கையொப்பத்தை சண்டை நடந்ததற்காக போலிசார் என்னிடம் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி**

கடந்த 06.01.2023 ஆம் தேதி மதியம் 03.00 மணியளவில் நானும் சிவசாமி என்பவரும் கொல்லையில் வேலை முடித்து விட்டு, வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சம்பவ இடத்தில் இருந்த ஆதனக்கோட்டை போலிசார் குற்ற எண் 3/2023 வழக்கில், எங்கள் முன்னிலையில், சம்பவ

இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது மனைவி. சம்பவம் சம்மந்தமாக நான் ஆதனக்கோட்டை காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. சம்பவம் என்ன தேதியில், எத்தனை மணிக்கு நடந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் மதியம் 12.30 மணி இருக்கும், ரொம்ப நாள் ஆகிவிட்டதால், தேதி ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததில் இருந்து எத்தனை மாதம் கழித்து போலிசார் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சம்பவத்தன்றே கையொப்பம் பெற்றார்கள். எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். போலிசார் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல, எழுதியிருந்தது. அதில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், அதை நான் படித்துப் பார்க்கவில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு அ.சா.1 எனது மனைவி என்பதால், சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.18 17:34:58 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**